# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

## செய்தி தகவல்

வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல்

செய்தி தகவல் எண் 12/2016 நாள் 03.09.2016

ஊரகம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி சாதாரணத் தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல் குறித்த ஆணைகளை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆண்ணயம் 08.08.2016-ல் வெளியிட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியல்களை நடப்பில் உள்ள சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களில் உள்ள விவரங்களைக் கொண்டு தயாரித்திட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, வாக்குச்சாவடிவாரியாக வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

எனவே, தற்போது வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து வெளியிடுவதற்கான கால அட்டவணையை கீழ்க்கண்டவாறு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

| | |
|---|---|
| 1.வாக்காளர் பட்டியல்களின் வரைவு பிரதிகளை இறுதி செய்தல் | 12.09.2016-க்குள் |
| 2.வாக்காளர் பட்டியல்களை அச்சுப் பணிக்கு ஒப்படைத்தல் | 14.09.2016-க்குள் |
| 3.வாக்காளர் பட்டியல்களின் அச்சுப் பணிகளை முடித்தல் | 16.09.2016-க்குள் |
| 4.வாக்காளர் பட்டியல்களை வெளியிட்டு பிரசுரித்தல் | 17.09.2016-க்குள் |
| 5.முடிவறிக்கையினை ஆணையத்திற்கு அனுப்பி வைத்தல் | 19.09.2016-க்குள் |

இத்தகவல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

03/09/16

மக்கள் தொடர்பு அலுவலர்